Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

God is faithful for the past seventy years.

Vol. 70 | கர்த்தாவே, உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன். சங். 25:1 | நவம்பர் 2024 | No.11

வெற்றி பெறும் வாழ்வு

The life that wins

Charles G. Trumbull

ஒரே ஒருவரது வாழ்வுதான் வெற்றி பெற முடியும். அது இயேசு கிறிஸ்துவின் வாழ்வு. ஒவ்வொரு மனிதனும் அந்த வாழ்வைப் பெறவும் அந்த வாழ்வினை வாழவும் முடியும்.

எல்லா மனிதரும் கிறிஸ்துவைப் போலிருக்கலாம் என்று கருதவில்லை, அதை விட மேலாக வாழ விரும்பு கிறேன். எப்போதும் அவன் கிறிஸ்து வின் உதவியைப் பெறலாம் என்று நான் கூறாமல் அதைவிடக் கூடுதலாகப் பெற விரும்புகிறேன். அவன் கிறிஸ்துவின் வல்லமையைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் அதைவிட அதிகமாகப் பெற்றுக்கொள்ளட்டும். ஒருவன் பாவத் திலிருந்து விடுதலை பெற்றால் இன்னும் அதிக வெற்றியுடன் அவன் வாழ வேண்டும்.

இதை விளக்க எனது தனிப் பட்ட அனுபவத்தை நான் கூற வேண்டும். தோல்வியைப் பற்றி அனேகர் அறிந்திருப்பதை விடக் கூடுதலாக நான் அறிந்திருக்கிறேன். அதாவது கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்தல், அவரை கனவீனம் பண்ணுதல், பரலோக தரிசனங்களுக்குக் கீழ்ப்படியாமை, மற்றவர்கள் பெற்றுக் கொள்ளுகிறதும், நான் பெற்றுக் கொள்ள கிறிஸ்து வாஞ்சையாயிருப் பதை நான் உணராமலும் இருப்பது போன்ற நிலை. இவையெல்லாம் நான் சரியாயிருக்கிறேனென்று எண்ணியும் என்னில் காணப்படுபவைகள். ஆனாலும் ஒரு தனிப்பட்ட தோல்வி, ஏமாற்றம் என்பவற்றின் ஒரு பரிதாபமான கதையைச் சொல்லாமல் கூடுதலான தேவனுடைய நீடிய பொறுமை, அளவு கடந்த அன்பு ஆகியவற்றை நன்றியுடன் கூறுகிறேன்.

கிறிஸ்துவின் புதிய அனுபவம் எனக்குள் வருமுன்னால் எனது வாழ்க் கையின் உணர்வுள்ள தேவைகள் போது மானவைகளாயிருந்தன. அவைகளில் மூன்று முக்கியமானவைகளை இங்கு சிந்திப்போம்.

ஆவிக்குரிய வாழ்வில் ஏற்ற இறக்கங்கள்

ஆவிக்குரிய வாழ்வில் சில வேளைகளில் உன்னதங்களிலும் சில வேளைகளில் ஆழங்களிலுமாய் இருப் பேன். எழுப்புதலடையச் செய்யும் ஒரு கூடுகை, உள்ளத்தை ஆராய்தல், அர்ப் பணித்த ஒருவர் கொடுக்கும் செய்தி, ஜெய வாழ்க்கை நடத்தும் ஒரு தலைவர், ஆவியால் நிரப்பப்பட்ட ஒரு புத்தகம், ஒரு கிறிஸ்தவ சேவை செய்யும் கடமையுணர்வு, ஜெபத்தில் ஈடுபாடு போன்றவைகள் என்னைத் தூக்கி விடும். எனவே சிறிது நேரம் நான் எழுந்து நிற்பேன். அப்போது தேவன் எனது ஆவிக்குரிய வாழ்வில் மிகவும் நெருக்கமாயிருப்பதாகத் தோன்றும். ஆனால் அந்நிலை நீடிப்பதில்லை. சில வேளைகளில் ஏற்படும் சோதனையால் தோல்வி, கிரமம் கிரமமான வீழ்ச்சி, இவற்றால் எனது மிக நல்ல அனுபவங் களை நான் இழந்து தாழ்மட்ட நிலையில் இருப்பதை உணருவேன். கிறிஸ்தவன் என அழைக்கப்படுகிற ஒரு வனுக்கு இது ஒரு ஆபத்தான இடம்.

சுற்றி நிற்கும் பாவம்

சில வேளைகளில் நான் வெறும் போராட்டம் போராடவில்லை. நான் பரிபூரணத்தைப் பார்க்கவில்லை. ஆனாலும் சில திசைகளில் நான் வெற்றி பெறுவது வழக்கம்தான் என எண்ணி னேன். அநிச்சயம் மற்றும் தடைகளுக்கு பதிலாக வெற்றிகள் நொறுக்குவதும் கனவீனப்படுத்துவதுமான தோல்வி களைக் கொண்டு வந்தன. நான் விடுதலைக்காக உத்தமமாக ஜெபித் தேன். ஆனால் விடுதலை, அந்த வழக்க மான விடுதலை வரவில்லை.

ஆவிக்குரிய வலிமை இல்லாமை

நான் ஏராளமான கிறிஸ்தவ பணிகளைச் செய்தேன். தனித்தாள் ஊழியம் (Personal Evangelism) செய்தேன் - கடினமாக உழைத்துப் பேசி ஒருவர்பின் ஒருவராக இரட்சகரை ஏற்றுக்கொள்ளச் செய் தேன். ஆனால் நல்ல பலனில்லை. எனது பணிகள் நான் செய்ய வேண்டிய விதமாகச் செய்வது போல் எனக்குத் தோன்றவில்லை. மற்றவர்கள் செய்தது போல என்னால் செய்ய முடியவில்லை. ஏன்? எனது கிறிஸ்தவ சேவையின் வறட்சியை எண்ணி மனம் நொந்தேன்.

கிறிஸ்துவைப் பற்றிய ஒரு புதிய புரிந்துகொள்ளுதல்

கிறிஸ்தவ பணியில் மிக ஆசீர்வதிக்கப்பட்டவர்களென்று நான் எண்ணியவர்கள் கிறிஸ்துவைப் பற்றி கொண்டிருந்த கருத்தை நான் கொண் டிருக்கவில்லை. அது எனக்கு அதிக தூர மாகவும், மிகப் பெரியதாகவும், ஆழ மானதாகவும் நான் ஒருபோதும் எண்ணிப் பார்க்காததுமாயிருந்தது. இதில் நான் குறைவுபட்டவன் என்ற ஆலோசனை முதலில் வந்த போது நான் எதிர்த்தேன். நான் கிறிஸ்துவை விசுவா சித்து அவர் தேவ குமாரனென்றும் தேவனோடு ஒன்றாயிருக்கிறாரென்றும் அவரை ஆராதிக்கவில்லையா? இருபது ஆண்டுகளுக்கு முன்னாலேயே அவரை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளவில்லையா? அவராலே மட்டுமே நித்திய ஜீவன் உண்டென்று விசுவாசித்து அவரது சேவையிலேயே முழுவாழ்வையும் செலவு பண்ண வில்லையா? தொடர்ந்து அவருடைய உதவியையும் வழிநடத்துதலையும் விசுவாசித்து அவரையே என் ஒரே நம்பிக்கையாக வைக்கவில்லையா? இதையெல்லாம் செய்தும் என்னைவிட உயர்ந்த மேன்மையான கருத்து கிறிஸ்துவைப் பற்றி கிடைக்கக்கூடுமா? நான் இதுவரை சேவித்ததை விட அதிகமாக சேவிப்பது தேவை என அறிவேன். ஆனால் ஒரு புதிய புரிந்து கொள்ளுதல் அவரைப் பற்றி எனக்கு வேண்டுமே.

இந்த எண்ணங்களெல்லாம் பல திசைகளிலுமிருந்து எனக்கு நேராக வந்து கொண்டிருந்தன. நான் அவற்றை உதாசீனம் செய்ய முடியவில்லை. ஒரு நாள் Dr.ஜான் ஜோலெட் என்ற இங்கிலாந்தைச் சேர்ந்த ஒருவர் எபேசி. 4:11,12 வசனங் களிலிருந்து பிரசங்கித்தார். "மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச் சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷ ராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர் பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்து வின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும்...". அவரைப் புரிந்து கொள்ள என்னால் முடியவில்லை. அவரது ஆழம் எனக்கு எட்டாதது. அவர் கிறிஸ்துவைக் குறித்து பேசிக் கொண்டிருந்தார். எனக்குத் தெரியாத அனேக காரியங் களை அவர் வெளிப்படுத்தினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

அன்பான வாசகர்களின் கவனத்திற்கு

புதிய ஆண்டு, புதிய முகவரி பட்டியல் அச்சிடு கிறோம். வாசகர் யாருக்காவது பக்கிரிகை வரக்குவரினால் தயவாய் தகவல் தாருங்கள்.

ஆசிரியர்

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

பூர்வகாலமுதல் கர்த்தர் எனக்குத் தரிசனையானார் என்பாய்; ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக் கொள்ளுகிறேன் எரேமியா 31:3.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படி, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தத்தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்து கொள்ளப்பட்ட **பரதேசிகளுக்கு** எழுதுகிறதாவது: கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; 1பேதுரு1:2,3.

2024 நவம்பர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், '**வெகுமனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்**' துதிக்கிறேன்.

"**பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமானது; அவர்களில் பிரதான பாவி நான்**" 1தீமோ.1:15.

"**எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்**" 1தீமோ.2:4.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பிறப்பு சரித்திர பூர்வமானது என்பதை நாம் மட்டுமல்ல உலகமே அறியும். அதனால்தான் **கி.மு., கி.பி.** என்று அச்சிடுகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, மரணம், உயிர்தெழுதல் மாத்திரமல்ல, "அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டு பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்" லூக்கா 24:51.

அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று:

கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே **மறுபடியும் வருவார்** என்றார்கள் அப்.1:10,11. **நீங்கள் ஆயத்தமா?**

இம்மாதமும் வாசகருக்கு பிரயோஜனமாக '**பண்டிகை**' பற்றி **7** குறிப்புகள் எழுதுகிறேன்.

பண்டிகை வந்த வரலாறு

இக்காலத்தில் (கி.பி. 313 முதல் 606 வரை) கிறிஸ்துவின் சபை ஆதி அப்போஸ்தல காலத்தை முற்றிலுமாய் மறந்து, பாபிலோன் மதத்திலுள்ள சகல சடங்காச்சாரங்களையும் கடன் வாங்கி, சற்று மாற்றியமைத்து தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டது. முதன் முதலாவதாக 320-ல் ஆலயத்தில் மெழுகு வர்த்தி வைக்கும் வழக்கம் நுழைந்தது. அதைத் தொடர்ந்து ஏராளமான சடங்குகள் ஒவ்வொன்றாய் நுழையவே, கிறிஸ்து சபைக்கும் விக்கிரகாராதனைக்கும் வித்தியாசம் தெரியாமலாகி விட்டது.

பற்பல பண்டிகைகளைக் கொண்டாடி, புசித்து குடித்து வெறித்து பாடி ஆடி களித்த ரோமர், கிறிஸ்தவர்களுக்குப் பண்டிகைகளே இல்லாததால் சோர்படைந்தனர். அவர்களைத் திருப்திப்படுத்த பண்டிகை நாட்களை ஏற்படுத்தும் பிரச்சினை ஏற்பட்டது. சூரியன் தெற்கே சென்று மறைந்து, பின்பு வடக்கே திரும்பும் நாளாகிய டிஸெம்பர் 25-ம் தேதியை பாபிலோன் மதத்தவர் சூரிய தேவனின் பிறந்த நாளாய்க் கொண்டாடி வந்தனர். அந்நாளே கிறிஸ்து பிறப்பு பண்டிகைத் தினமாய் மாற்றப்பட்டது. (குளிர்காலமான டிஸெம்பரில் பலஸ்தீன மேய்ப்பர் தங்கள் மந்தைகளை வயல்வெளிகளில் தங்க வைப்பதில்லை. ஆகவே இயேசு டிஸெம்பரில் பிறக்கவேயில்லை என்று வேத சாஸ்திரிகள் சாதிக்கின்றனர்)

இன்றும், டிஸெம்பர் 25-ம் தேதியைத் தங்கள் ஆண்டவரின் பிறந்த தினமாக பயபக்தியுடன் கொண்டாடுகின்றனர் பலர். ஆனால் உண்மை எது? வருடத்தின் சகல நாட்களிலும் அந்த நாளைப் போல் கூடுதல் மதுபானம் செலவாகும் நாள் வேறு எது? அந்த நாளைப் போல் கூடுதல் ஆடு, மாடு, பன்றி, கோழி கொல்லப்படும் நாள் வேறு எது? அந்த நாளைப் போல் கிறிஸ்தவர்கள் (ஆடைகளுக்காக) கடன்படும் நாள் வேறு எது? பெர்கமு காலக் கிறிஸ்தவத்தின் பலன் இவை!

பாபிலோனிய மதத்தில் செமிராமிஸ் "தேவ மாதா", "பரலோக மாதா", "வானராக்கினி", "நித்திய கன்னிகை" என்னும் நாமங்களால் வணங்கப்பட்டாள். கிறிஸ்து சபையும் இயேசுவின் தாயை அதே நாமங்களால் வணங்கி, மரியாள் பெயராலும் பண்டிகை நாட்களை ஏற்படுத்திற்று.

செமிராமிஸ் சில இடங்களில் அஸ்ற்றாட்டி என்றும் அஸ்தரோத் என்றும் இஸ்டார் என்றும் அழைக்கப்படுவதுண்டு. அவள் பெயரால் மார்ச் மாதத்தை அடுத்து ஆறுவார நோன்பும் அதைத் தொடர்ந்து ஒரு பண்டிகை விருந்தும் பாபிலோனியருக்கு உண்டாயிருந்தது. அதை ஒட்டியே கிறிஸ்து சபையில் தபசு நாட்களும் உயிர்த்தெழுந்த பண்டிகையும் ஏற்படுத்தப்பட்டன. ஈஸ்டர் என்பது இஸ்டார் என்னும் அஸ்தரோத் தேவியின் பெயரின் மறுபேரேயன்றி வேறல்ல.

I. தேவனுடைய வசனம் தெளிவாக தெரிவிக்காத பண்டிகை கொண்டாட வேண்டாம்

பரிசுத்த வேதாகமம் தீர்க்கதரிசன புத்தகம் என்பதை நாம் அறிவோம். ஆகவே சரித்திரத்தில் நடந்த சம்பவங்களை வேத புத்தகம் துல்லிபமாக பதிவு செய்திருக்கிறது. சில சம்பவங்களை மாத்திரம் கீழே எழுதுகிறேன்:

1. பேழை

நோவாவுக்கு அறுநூறாம் வயதாகும் வருஷம் இரண்டாம் மாதம் பதினேழாம் தேதியாகிய அந்நாளிலே, மகா ஆழத்தின் ஊற்றுக் கண்களெல்லாம் பிழந்தன; வானத்தின் மதகுகளும் திறவுண்டன ஆதி.7:11.

ஏழாம் மாதம் பதினேழாம் தேதியிலே பேழை அரராத் என்னும் மலைகளின் மேல் தங்கிற்று.

பத்தாம் மாதம் மட்டும் ஜலம் வடிந்து கொண்டே வந்தது; **பத்தாம் மாதம்** முதல் தேதியிலே மலைச் சிகரங்கள் காணப்பட்டன.

(3-ம் பக்கம் பார்க்க)

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நாற்பது நாள் சென்றபின், நோவா தான் பேழையில் செய்திருந்த ஜன்னலைத் திறந்து,

பின்னும் ஏழு நாள் பொறுத்து, மறு படியும் புறாவைப் பேழையிலிருந்து வெளியே விட்டான்.

பின்னும் ஏழு நாள் பொறுத்து, அவன் புறாவை வெளியே விட்டான்; அது அவனிடத்திற்கு திரும்பி வரவில்லை.

அவனுக்கு அறுநூற்றொரு வயதாகும் வருஷத்தில், **முதல் மாதம் முதல் தேதியிலே** பூமியின் மேல் இருந்த ஜலம் வற்றிப் போயிற்று.

இரண்டாம் மாதம் இருபத்தேழாம் தேதியிலே பூமி காய்ந்திருந்தது ஆதி.8:4-14.

2. ஆரோன்

அப்பொழுது ஆசாரியனான ஆரோன் கர்த்தருடைய கட்டளையின் படியே ஓர் என்னும் மலையின் மேல் ஏறி, அங்கே இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட **நாற்பதாம் வருஷம் ஐந்தாம் மாதம் முதல் தேதியிலே** மரண மடைந்தான் எண்.33:38.

3. சாலமோன் கட்டின ஆலயம்

அவன் தான் ராஜ்யபாரம் பண்ணின நாலாம் வருஷம் **இரண்டாம் மாதம் இரண்டாம் தேதியிலே** கட்டத் தொடங் கினான்.

அப்படியே இஸ்ரவேலர் எல்லாரும் ஏழாம் மாதத்தின் பண்டி கையிலே ராஜாவினிடத்தில் கூடி வந்தார்கள்.

ஏழாம் மாதத்தின் இருபத்து மூன்றாம் தேதியிலே தங்கள் தங்கள் கூடாரங் களுக்குப் போக ஜனங்களுக்கு விடை கொடுத்தான் 2 நாளா.3:2; 5:3; 7:10.

இயேசுவின் பிறப்பு

ஏரோது ராஜாவின் நாட்களிலே யூதேயா விலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்த பொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து,

யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக் கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள் மத்தேயு 2:1,2.

அந்நாட்களில் உலகமெங்கும் குடி மதிப்பு எழுதப்பட வேண்டுமென்று அகுஸ்து ராயனால் கட்டளை பிறந்தது.

அப்பொழுது யோசேப்பும், ... குடிமதிப்பெழுதப்படும்படி,

கலிலேயா நாட்டிலுள்ள நாச ரேத்தூரிலிருந்து யுதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனான்.

அவ்விடத்திலே அவர்கள் இருக்கையில், அவளுக்குப் பிரசவகாலம் நேரிட்டது.

அவள் தன் முதற்பேரான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர் களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்ன ணையிலே கிடத்தினாள் லூக்கா 2:1-7.

II. தேவன் சொல்லாத பண்டிகை, மனிதன் ஏற்படுத்தின பண்டிகை கொண்டாட வேண்டாம்

வருஷத்தில் மூன்று தரம் எனக்குப் பண்டிகை ஆசரிப்பாயாக யாத்.23:14.

புளிப்பில்லா அப்பப்பண்டிகையைக் கொண்டாடி, நான் உனக்குக் கட்டளை யிட்டபடியே **ஆபிப் மாதத்தின்** குறித்த காலத்தில் ஏழுநாள் புளிப்பில்லா அப்பம் புசிப்பாயாக; அந்த மாதத்தில் எகிப்திலிருந்து புறப்பட்டாயே யாத்.23:15.

நீ வயலில் விதைத்த உன் பயிர் வேலைகளின் முதற்பலனைச் சேலுத்துகிற **அறுப்புக் கால பண்டிகை**யையும்,. **சேர்ப்புக் கால பண்டிகை**யையும் ஆசரிப்பாயாக யாத்.23:16.

சபை கூடி வந்து பரிசுத்தமாய் ஆசரிக்கும்படி, நீங்கள் குறித்த காலத்தில் கூறவேண்டிய கர்த்தரின் பண்டிகைகளாவன:

முதலாம் மாதம் பதினாலாம் தேதி அந்திநேரமாகிய வேளையிலே கர்த்தரின் **பஸ்கா பண்டிகையும்,**

அந்த மாதம் பதினைந்தாம் தேதியிலே, கர்த்தருக்குப் புளிப்பில்லா **அப்பப்பண்டிகையுமாய்** இருக்கும்; ஏழு நாள் புளிப்பில்லா அப்பங்களைப் புசிக்க வேண்டும் லேவி.23:4,5,6; எண்.28:17.

நீ இஸ்ரவேல் புத்திரரோடே **சொல்ல வேண்டியது** என்னவென்றால்: அந்த ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதி முதல் ஏழு நாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் **கூடார பண்டிகை**யாயிருப்பதாக லேவி.23:34; எண்.29:12; உபா.16:13.

III. ஆதி அப்போஸ்தலர் கட்டளையிடாத பண்டிகை கொண்டாட வேண்டாம்

IV. ஆதி திருச்சபை ஆசரிக்காத பண்டிகை கொண்டாட வேண்டாம்

V. இன்று வரை சில சபை பிரிவுகளும், தேவ ஊழியர்களும் கொண்டாடாத பண்டிகை கொண்டாட வேண்டாம்

VI. ஆத்துமாவுக்கு பிரயோஜனமில்லாத இந்த பண்டிகை கொண்டாட வேண்டாம்

தேவனுடைய பிள்ளைகளே, தேவனுடைய வசனம் சொல்வதைக் கேளுங்கள்:

போஜனத்தினாலே உன் சகோதரனுக்கு விசனமுண்டாக்கினால், நீ அன்பாய் நடக்கிறவனல்ல; அவனை உன் போஜனத்தினாலே கெடுக்காதே, கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே.

உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள்.

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்பு மல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினா லுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது ரோ.14:15-17.

VII. திராளான தீமையை உண்டாக்குகிற, உங்கள் பணத்தை வீணாக்குகிற பண்டிகை கொண்டாட வேண்டாம்.

பட்டாடைகள்: பல கோடி ரூபாய் பணத்தை பண்டிகை காலத்தில் கிறிஸ்த வர்கள் வீணடிக்கிறார்கள். மிஷனெரி ஊழியங்களுக்கு கொடுங்கள், கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

பட்டாசுகள்: கிறிஸ்தவர்கள் வாங்குகிற கோடிக்கணக்கான ரூபாய் பட்டாசு களை, முந்தின தினம் வெடிக்கிறார்கள்; அடுத்த நாள் அதன் குப்பைகளை பெருக்கி வெளியில் கொட்டுகிறார்கள்.

பட்டொளி: நீங்கள் உலகத்துக்கு வெளிச்ச மாயிருக்கிறீர்கள்; மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது.

விளக்கைக் கொளுத்தி மரக் காலால் மூடி வைக்காமல், விளக்குத் தண்டின் மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்.

இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்தி லிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப் படுத்தும்படி, **உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது** மத்.5:14,15,16.

நிறைவாக, தேவனுடைய வசனம் இந்த பண்டிகை கொண்டாட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கிறது.

"ஆகையால், இதுமுதற் கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந் திருந்தாலும், **இனி ஒருபோதும் அவரை மாம்சத் தின்படி அறியோம்**" 2 கொரி.5:16.

யோவானின் சாட்சி: வெளி1:9-20.

தமது வலது கரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந் தார்; அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது; அவருடைய முகம் வல்லமையாய்ப் பிர காசிக்கிற சூரியனைப் போலிருந்தது.

நான் அவரைக் கண்டபோது செத்தவனைப் போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்; அப்பொழுது அவர் தம்முடைய வலது கரத்தை என் மேல் வைத்து, என்னை நோக்கி: பயப் படாதே, நான் முந்தினவரும், பிந்தின வரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்;

மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கி றேன், ஆமென்;

இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக, ஆமென் வெளி.22.20,21.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக
தேவ கிருபை உங்களோடிருப்பதாக
உதவி : 94897 40295
அலுவலகம் : 95432 21008
உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

ஜெபியுங்கள்

1. **வருகையின் தூதன்** ஊழியத்தின் தேவைகளுக்காக, சிறப்பு காணிக்கை அனுப்பி ஊழியத்தைத் தாங்குங்கள்.
2. சில ஆண்டுகளுக்கு முன் ஒரு **ஜெப கையேடு** இரண்டு தடவை அச்சிட்டோம். 3-வது பதிப்பாக 1000 பிரதிகள் அச்சிட ரூபாய் 20,000 தேவை.
3. **2025** - ம் ஆண்டு பத்திரிகை அனுப்ப ஆண்டு காணிக்கை குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள். - **ஆசிரியர்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் Dr.**ஜான் டக்ளஸ் ஆடம்** குறித்து அறிந்தேன். அவரது மிகப்பெரிய ஆவிக் குரிய ஆஸ்திக்குக் காரணம் இயேசுவின் உண்மையான பிரசன்னத்தை அவர் எப்போதும் உணர்ந்தார் என்பதுதான். இயேசு எப்போதும் அவருடைய பிரசன்னத்தை அவரோடு வைத்திருந்த படியால் அவர் தமது விருப்பங்களிலும், நோக்கங்களிலும் விடுதலையுடையவ ராய் இயேசு தமது பிரசன்னத்தை வெளிப்படுத்துவதை எதிர்பார்த்திருந் தார். அவர் கிறிஸ்துவே தமது எண்ணங் களின் இருப்பிடம் என்றார். பிற விஷயங்களிலிருந்து அவரது மனம் இளைப்பாறுதலாயிருக்கும் போது அவர் கிறிஸ்துவிடம் உரத்த சத்தமாகப் பேசுவார். அது தெருவோ எவ்விடமாக இருந்தாலும் ஒரு நண்பனிடம் பேசுவது போல பேசுவார். இயேசுவின் பிரசன்னம் அவருக்கு மிக நிஜமாயிருந்தது.

சில மாதங்களுக்கு பிறகு எடின் பரோவில் ஒரு மாநாட்டிற்கு செல்ல வேண்டியதாயிருந்தது. Dr.**ராபர்ட் ஹார்டன்** என்பவர் '**கிரிஸ்தவ வாழ்வின் ஆதாரங்கள்**' குறித்துப் பேசுவதாயிருந்தது. அவர் எங்கள் கிறிஸ்தவ வாழ்வை உறுதிப் படுத்த தொடரான பல காரியங்களைச் சொல்லுவார் என்று எதிர்பார்த்தேன். அவைகள் எனக்குத் தேவை என்றும் நான் அறிந்திருக்கிறேன். ஆனால் அவரது முதல் வாக்கியம் எனது குற்றத்தை எனக்குக் காண்பித்தது. எனது இருதயம் புதிய மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது. அவர் இவ்வாறு கூறினார்: "எனது அருமை நண்பர்களே, கிறிஸ்தவ வாழ்வின் ஆதாரங்கள் இயேசுகிறிஸ்துவே. அதுவே எல்லாம். அதுவே போதுமானது." பின்னால் நான் Dr.ஹார்டனிடம் எனது தனிப்பட்ட தேவைகள், கஷ்டங்கள் போன்ற வற்றைக் கூறிய போது அவர் உத்தம மாக கூறிய பதில்: "ஆ Mr. **டிரம்புல்** அவர் களே, நாம் துணிச்சலான விசுவாசத் தோடு கிறிஸ்துவோடு அடியெடுத்து வைத்தால் அவர் நமக்காக ஏராளமான நன்மைகளைச் செய்ய வல்லவராயிருக் கிறார்"என்பதே.

கிரேட் பிரிட்டனை விட்டு நான் திரும்புமுன்னே நான் மறு படியும் என்னைத் தாண்டி நின்ற எண்ணத்தால் தாக்கப்பட்டேன். அது Rev.**றிச்சார்டு ராபர்ட்ஸ்** என்பவர் லண்டனில் உள்ள ஒரு ஆலயத்தில் பிலிப். 1:21-ல் சொல்லப்பட்ட '**கிரிஸ்து எனக்கு ஜீவன்**' என்பதாயிருந்தது. அவர் ஒரு இளைஞ னான வேல்ஸ் தேசத்து ஊழியக்காரன். அது கிறிஸ்துவே ஜீவன் என்பதை வெளிப்படுத்தியது. கிறிஸ்துவே நமது முழுமையான வாழ்வும் ஒரே வாழ்வு மாயிருக்கிறார். சில காலங்களுக்குப் பிறகு ஒரு மாநாட்டில் சென்ற போது அங்கு பிஷப் **ஒல்டுஹாம்** என்ற இந்தி யாவைச் சேர்ந்தவர் '**ஜீவ தண்ணீர்**' என்ற தலைப்பில் பேசினார். அவர் கிறிஸ்துவின் நோக்கம், அவரது சீடர்கள் அனைவரும் ஜீவனுள்ள நீரூற்று களாகப் பொங்கி வழிந்து எப்போதுமே விட்டு விட்டல்ல தொடர்ந்து தங்கு தடையின்றி மற்றவர்களுக்குப் பாய்ந்து செல்வதே கிறிஸ்துவின் நோக்கம் எனக் கூறினார். அதற்காக அவர் யோவான் 7:38-ம் வசனத்தை எடுத்துக் கூறுகிறார். "...என்னிடத்தில் விசுவாசமாயிருக் கிறவன் எவனோ அவன் உள்ளத்தி லிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்றார். அவர் சொல்லும் போது சிலரது வாழ்வில் சிறு வாளிகள் தண்ணீர் மட்டுமே இருப்பதாகவும், இந்தியாவி லுள்ள நீரிரைக்கும் சக்கரங்களைப் போல கிரீச் என்ற சத்தத்தோடு குறை வான தண்ணீரையே வெளிக் கொணர் கின்றன. ஆனால் சிலருடைய வாழ்வில் யாரும் தடுக்க முடியாத அளவில் நீர் எப்போதும் பெருக்கெடுத்து ஓடுவ தாகவும் கூறினார். அவர் மேலும் கிழக்கு நாட்டைச் சேர்ந்த ஒரு வயோதிப தாயார் செய்த அற்புதமான பணி யினைக் குறிப்பிட்டு, கேட்டு கொண் டிருந்த எங்களைத் தலை குனியச் செய்தார். அவள் ஒரு வருடத்திற்கு முன்புதான் கிறிஸ்துவை அறிந்து கொண்டவள்.

ஜெபித்துக் கொண்டே இரு

அடுத்தநாள் காலை என் அறையில் தனியாக முழங்காலூன்றி ஆண்டவரிடம் எனக்கு வழிகாட்டும் படி கூறினேன். கிறிஸ்துவைப் பற்றிய என்னிடமில்லாத ஒரு கருத்து இருந்தது, அது எனக்குத் தேவை யாயிருந்தால் நான் அதைப் பெற வேண்டும். ஏனெனில் சிலரிடம் நான் அதைக் காணவும் கேட்கவும் செய்கி றேன். அது நன்மை தருவதாகவும் இதுவரைக்கும் நான் பெறாததும், என்னைத் தாண்டியதாகவுமிருக்கிறது. எனவே அது நிச்சயமாக எனக்கு வேண்டும் என்று தேவனிடம் கேட்டேன். என்னிடம் ரிச்சர்டு ராபர்ட்டின் பிரசங்கம் இருந்தது. '**கிரிஸ்து எனக்கு ஜீவன்**' நான் முழங்காலிலிருந்து எழுந்து அதை வாசித்தேன். திரும்பவும் நான் ஜெபித் தேன். தேவன் தம்முடைய நீடிய பொறுமையோடு, மன்னிக்கிறவரும், அன்புள்ளவருமாக நான் கேட்டதை எனக்குத் தந்தார் - ஒரு புதிய கிறிஸ்து - முற்றிலும் புதியானவர் - புதிய புரிந்து கொள்ளுதலும் கிறிஸ்துவின் உணர் வையும் உடையவருமான அவர் எனக்குச் சொந்தமானார்.

என்ன பெரிய மாற்றம்! என் வாழ்வில் முதல் முதலாக புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட '**கிரிஸ்து உங்களில்**','**நீங்கள் கிரிஸ்துவில்**', '**கிரிஸ்து நமது ஜீவன்**', '**கிரிஸ்துவில் நிலைத்திருப்பது**' போன்ற வையெல்லாம் நிச்சயமானதும் ஆசீர் வாதமுமான உண்மைகள், அவைகள் உருவகங்களல்ல என கண்டுகொண் டேன். இப்போது யோ. 15-ம் அதிகாரத் தினை நான் வாசிக்கும் போது அது என்னைப் புது ஜீவனால் புல்லரிக்கச் செய்கிறது. மேலும் எபேசி. 3:14-21; கலாத்தியர் 2:20; பிலிப்பியர் 1:21 ஆகிய வசனங்களைப் படித்துப் பாருங்கள்.

ஜெபம், அவரது பணியைச் செய்ய போதிக்கவும் பலப்படுத்தவும் செய்கிறது.

கிறிஸ்து எனது இரட்சகர் என்று அறிந்து, எனக்கு வெளியே இருக் கிறவர், வெளியே இருந்து கொண்டு இரட்சிப்பின் பணியை செய்கிறவர், நான் தேவைப்படும் போதெல்லாம் வந்து உதவி செய்கிறவர், எனக்குத் தேவையான வல்லமை, இரட்சிப்பு ஆகியவற்றைத் தருபவர் என்று எண்ணி யிருந்தேன். இப்போது நான் அவரை இன்னும் நன்றாக அறிந்து கொண் டேன். இறுதியாக இயேசுகிறிஸ்து நிஜமாகவே என்னுள் இருப்பதை உணர்ந்தேன். அதற்கு மேலாக அவர் எனது முழுவாழ்வையும், சரீரம், உள்ளம், ஆத்துமா, ஆவி எல்லாவற் றையும் ஆளுகிறவர் என்று அறிந்து கொண்டேன். அவரை ஒரு உதவியாள ராக இரட்சகராக வெளியே இருந்து செயல்படுகிறவராகக் கொள்ளுவதைப் பார்க்கிலும் எனது சொந்த ஜீவனாகக் கொள்வது எத்தனை மேன்மையானது!

அவர் ஒருவர் போலவும் நான் வேறொருவன் போலவும் எண்ணி அவரிடம் உதவி கேட்க வேண்டிய தில்லை. அவரது வேலையை செய்து கொண்டே இருந்தால் போதும். அவரது சித்தம் என்னிலும் என்னோடும் என் மூலமாகவும் நடைபெற வேண்டும். எனது சரீரம், உள்ளம், சித்தம், ஆவி யாவும் அவருடையது மட்டுமல்ல அவரில் ஒரு பகுதி. அவர் என்னிடம் கேட்டுக்கொண்டதும் விசுவாசிக்கச் சொன்னதும் என்னவென்றால்: "கிறிஸ்து வுடனே கூடச் சிலுவையிலறையப்பட் டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்". (கலா.2:20) "ஏனென் றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப் பட்டது; ... அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர். எல்லாம் அவருக்குள் நிலை நிற்கிறது..." கொலோ.1:16-18.

பவுல் மிகுந்த சந்தோஷத் தோடே, '**என்னில் கிறிஸ்துவே பிழைத்திருக்கி றார்**' என்கிறார். '**கிறிஸ்துவைப் போல வாழ விரும்புகிறேன்**' அல்லது '**கிறிஸ்துவின் உதவியோடு வாழ்கிறேன்**' '**கிறிஸ்துவுக்கு சேவை செய்ய வாழ் கிறேன்**' என்றோ அவர் சொல்லாமல் '**கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார்**' என்கிறார். இந்த வாக்கியத்தின் உண்மையான பொருளை நான் உணர்ந்து கொண்ட தற்காக அவரைத் துதிக்கிறேன்.

தனிப்பட்ட அறிவு

வெற்றிபெறும் ஒரு வாழ்வு என்று இப்போதுதான் அறிந்து கொள்கி றேன். அது இயேசுகிறிஸ்துவின் வாழ்வு. இது கேட்கிற ஒரு வாழ்வாகவும் இருக்கலாம். ஆனால் அவர் நம்மில் பிரவேசித்து, நம்மை நிரப்பவேண்டும். அவரால் நாம் ஆளப்பட வேண்டும். அதற்காக நாம் முற்றிலும் நிபந்தனை யில்லா அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும். நமது சித்தம் அவரது சித்த மாயிருக்க வேண்டும். நமது வாழ்வின் எஜமானராகவும் அவர் நமது இரட்சக ராகவுமிருக்க வேண்டும். அவர் நம்மை அவரால் நிரப்புவார். தேவத்துவத்தின் முழுமையால் நாம் நிரப்பப்படுவோம்.

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு மனிதன் கிறிஸ்துவை தனது வாழ்வின் நிறைவாகக் கொள்ளும் போது அவன் பாவம் செய்வதில்லை என்ற தவறான சமசீரற்ற கொள்கையை உங்கள் முன் வைப்பதாக எண்ண வேண்டாம். '**கிறிஸ்துவின் வாழ்வில்**' நாம் வந்தாலும் நமக்கு சுயசித்தம் இருக்கிறது. அந்த சுயசித்தத்தால் நாம் கிறிஸ்துவைத் தடுக்க முடியும். ஆண்டவர் எனக்குத் தந்த புதிய அனுபவத்தில் நான் பேசுகிறேன். இத்தகைய அனுபவத்தை நான் அடைந்ததுண்டு. ஆனால் அதற்குப் பின் நாம் தோல்வியிலிருந்து மீளுவதும் இயற்கைக்கு மேலாக ஆசீர்வதிக்கப் படுவதும், அது விரைவாகவும் முழுமையாகவும் நடைபெறும். அதை நான் கற்றிருக்கிறேன். முழு அர்ப்பணிப்புடனே அவரை நம்பும் போது பாவத்திற்கு எதிராகப் போராட வேண்டிய தில்லை. ஆனால் பாவத்தின் ஆசையிலிருந்தும், வலிமையிலிருந்தும் முழுமையாக விடுதலை கிடைக்கிறது. இந்த விடுதலை மேற்கொள்ளுதலை விட மேலானதும், நிலையாகத் தொடருவதையும் என் வாழ்வில் உணருகிறேன். கிறிஸ்துவே என்னை சுத்திகரித்து ஒருமைப்படுத்தும் வாழ்வாயிருக்கிறார்.

தேவைகள் சந்திக்கப்படுதல்

1. எனது வாழ்வில் இதுவரை அறியாததும், வித்தியாசமானதும், மிக நன்மையானதுமான நிலையான ஒரு ஐக்கியத்தை தேவனுடன் பெற்றேன்.

2. ஒரு புதுவிதமான வெற்றி, சுயாதீனத்தின் மூலம் வெற்றி என்னைச் சுற்றிலும் நெருங்கியும், என்னைத் தொண்டையை நெரித்தும், சேதப் படுத்திக் கொண்டுமிருந்த பாவங்களிலிருந்து விடுதலை. நான் கிறிஸ்துவை நம்பி அவரை அழைத்த போது இந்த விடுதலை எனக்குக் கிடைத்தது.

3. இறுதியாக சேவையில் ஆவிக்குரிய பலன்கள் இவ்வுலகில் நான் ஒரு போதும் அறியாத பரலோக சந்தோஷத்தைப் பகிர்ந்தளித்தன. எனக்கு மிகவும் நெருக்கமான நண்பர்களும் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களுமான ஆறு பேரது வாழ்வில் கிறிஸ்துவினால் முழுமையான புரட்சி ஏற்பட்டது. அவர்கள் இந்தப் புதிய விதமான தேவனை அவருடைய முழுமையுடன் பெற்றுக்கொண்டனர். தேவன் ஒருவருடைய வாழ்வில் வாசம் செய்ய சாவியினை அவரிடம் அளிக்கும் போது மற்ற வர்களுடைய வாழ்வில் அவர்கள் மூலம் செய்யவிருக்கும் அதிசயங்களையும் அதற்குரிய நிரூபணங்களையும் காணலாம்.

இயேசுகிறிஸ்து நமது உதவியாளராக மட்டும் இருக்க விரும்பவில்லை. அவர் நமது ஜீவனாகவே இருக்க விரும்புகிறார். நாம் அவருக்காக பணி செய்வதை விட அவரது பணியை நம்மூலமாக அவர் செய்ய அனுமதிக்க வேண்டும். நமது வாழ்வு கிறிஸ்துவினுடையதாக மட்டுமல்ல, கிறிஸ்துவே நமது வாழ்வாக ஜீவனாக இருக்கும் போது அது வெற்றியுள்ளதாகவே இருக்கும். ஏனெனில் அவர் தோல்வியடையக் கூடாதவர். வெற்றி பெறும் வாழ்வு, கனிதருவதும் சேவை செய்வதுமான வாழ்வு அவரிடம் உண்டு. ஏனெனில் இவ்வகையான புதிய சேவை வாழ்வு கிறிஸ்துவே மற்றவர்களுக்கு நம்மூலம் சேவை செய்கிறவராக இருக்கிறார். இவ்வித கனிதரும் சேவை வழக்கமானதும் நிலையானதும் அவரிலுள்ள விசுவாசத்தாலும் ஏற்படுவதால் நமது பணிகள் அவர் நம்மில் வாழ்வதால் ஏற்படுகின்றன.

மூன்று நிபந்தனைகள்

இவ்வாறு கிறிஸ்துவை நமது வாழ்வின் முழுமையாக ஏற்றுக்கொள்ள மூன்று நிபந்தனைகள் உண்டு. முழுமையான பாவ அறிக்கைக்குப் பின் தனிப்பட்ட முறையில் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கெண்டு அதன் மூலம் பாவத்தின் விளைவுகளாகிய குற்ற உணர்வு அதன் வலிமை ஆகியவற்றிலிருந்து விடுபடுகிறோம்.

1. **நம்மையும் நமக்குள்ள யாவற்றையும் நிபந்தனையின்றி கிறிஸ்துவாகிய நமது எஜமானுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.**

2. **கிறிஸ்துவை நமது நிறைவாகிய ஈவாக அருளிச் செய்ய தேவனிடம் வேண்டிக் கொள்ள வேண்டும்.**

3. **நாம் கேட்டதை தேவன் செய்து விட்டார் என விசுவாசிக்க வேண்டும் – அவர் செய்வார் என்றல்ல, அவர் செய்து விட்டார் என்று விசுவாசிக்க வேண்டும்.**

இந்த மூன்றாவது படியில் அமைதியான விசுவாசத்தில் செயல் சார்ந்திருக்கிறது. நமது விசுவாசம் தேவனை முழுவதுமாய் நம்புகிறதாயிருக்க வேண்டும். ஏனெனில் தேவனுடைய வார்த்தை பாதுகாவலானதும், நன்மையானதும், நிச்சயமான நிரூபணமுமாயிருக்கிறது.

மேலும் கிறிஸ்து அவரது ஆசீர்வாதங்கள், வல்லமை, வெற்றி, சேவை போன்ற எல்லாவற்றிலும் மேலானவர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். கிறிஸ்து ஆவிக்குரிய வல்லமையை உருவாக்கினாலும் அந்த வல்லமையை விட அவர் மேலானவர். அவர் தேவனுடைய மிகப் பெரிய நன்மை, அவர் தேவன். இந்த நன்மையை நாம் பெற வேண்டும். இவ்வாறு கிறிஸ்து நம்மில் வாழ நம்மை முழுமையாக அவருக்கு ஒப்படைக்க வேண்டும். சுயத்தை முற்றிலும் அகற்ற வேண்டும். அதனால், நானல்ல, கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார் என்ற அனுபவத்துக்குள் வர வேண்டும். இந்த அனுபவம் உங்களுக்குத் தேவையா?

கிறிஸ்துவின் பரிபூரணம்

The fullness of Christ

Rich Carmichael

"ஏனென்றால் தேவக்துவத்தின் பரிபூரணமெல்லாம், சரீர பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது ... நீங்கள் அவருக்குள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்." *(கொலோ.2:9-10)*

இந்தப் பகுதியில் வரும் '**பரிபூரணம்**' என்ற பதம் '**நிறைவு**' என்பதிலிருந்து வருவதை நான் கற்றுக் கொண்டேன். எனவே நாம் கிறிஸ்துவில் நிரப்பப்படுகிறோம் என்ற அர்த்தத்தைத் தருகிறது. வேறு வார்த்தைகளில் கிறிஸ்துவின் '**நிறைவிலிருந்து**' - என்பது தேவத்துவத்தின் நிறைவிலிருந்து! - நாம் நிரப்பப்படுகிறோம் அல்லது அவரில் பரிபூரணமாக்கப்படுகிறோம். அப்போஸ்தலனாகிய யோவான் சொல்வது போல, "அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம்" *(யோவா.1:16)*

இந்த ஆச்சரியமான '**கிறிஸ்துவின் பரிபூரணம்**' என்ற சத்தியத்தின் விசாலம் என்ன? கிறிஸ்து யார்? அவர் நமக்குப் பெற்றுத் தந்தது என்ன? **"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்"** *(பிலி4:19)*. அந்த தெய்வீக வல்லமை வாழ்வுக்கு போதுமானது. *(2 பேது.1:3)* ஒரு வினாடி கிறிஸ்துவின் பரிபூரணத்தை எண்ணிப் பாருங்கள்.

நமது மகிமையான ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து

"அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப் பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும், காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது" *கொலோ.1:15-17.*

இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமானவர் *(எபி.1:3)*. அவர் தேவனுடைய ரூபம் *(பிலி.2:6)*. சகல பரிபூரணமும் அவருக்குள் வாசமாயிருக்கிறது *(கொலோ.1:19)*. அவர் தேவன் *(யோவா.1:1)*. சர்வத்திற்கும் மேலான தேவன் *(ரோமர் 9:5)*. சர்வத்தையும் தம்முடைய வசனத்தினாலே தாங்குகிறவர் *(எபி.1:3)*. அல்பாவும் ஓமேகாவும், ஆதியும் அந்தமும், முந்தியவரும் பிந்தினவருமானவர் *(வெளி.22:13)*.

அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து *(மத்.16:16)*. பிதாவோடு ஒன்றாயிருக்கிறவர் *(யோ.10:30)*. பிதாவை வெளிப்படுத்துகிறவர்*(யோ.17:26)*. பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறவர் *(கொலோ.3:1)*. வழியும், சத்தியமும் ஜீவனுமானவர். பிதாவிடம் செல்லுவதற்கு ஒரே வழி *(யோவா.14:6)*.

தேவனுடைய வார்த்தை *(வெளி.19:13)*. அவருடைய வார்த்தைகள்

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆவியும் ஜீவனுமாயிருக்கின்றன(யோ.6:63) அவர் தேவனுடைய இரகசியம், அவருக்குள் ஞானம், அறிவு ஆகிய வற்றின் பொக்கிஷங்கள் அடங்கி இருக்கிறது. அவரே அஸ்திபாரம்(1கொரி.3:11 ஜீவனுள்ள கல் (1பேது.2:4). விலை யேறப் பெற்ற மூலைக் கல் (1பேது.2:6)

அவர் ஜீவ அப்பம் (யோ.6:35). நித்திய ஜீவன் வரைக்கும் நிலைத் திருக்கும் போஜனத்தைக் கொடுப்பவர் (யோவா.6:27). ஆவிக்குரிய கன்மலை (1கொரி.10:4). திருப்திப்படுத்தும் ஜீவ தண்ணீரைக் கொடுப்பவர் (யோ.4:14). பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானப்படுத்துகிறவர் (மத்.3:11)

அவரே உண்மையான திராட்சச் செடி (யோ.6:35). பரிபூரண ஜீவனுக்கு ஆதாரம் (யோவா.10:10). நிறைவான சந்தோஷம் (யோவா.15:11). உலகம் தராத சமாதானம் (14:27). நம்பிக்கை யின் ஆதாரம் (1தெச.1:3). பெலப்படுத்து கிறவர் (பிலி.4:13). ஆறுதலின் ஆதாரம் (2தெச.2:16-17). இளைப்பாறுதலின் இருப்பிடம் (மத்.11:29). பொறுமைக்கு நேராய் நடத்துபவர் (2தெச.3:5). நீதியின் இருப்பிடம் (பிலி.1:11). திருப்தி அளிக்கும் காரணர் (1கொரி.1:2).

கிருபையினாலும் சத்தியத்தி னாலும் நிறைந்தவர் (யோவா.1:14). மனதுருக்கமுள்ளவர் (மத்.9:36). நீடிய பொறுமையுடையவர் (1தீமோ.1:16). அவரது அன்பு, ஆழம், நீளம், அகலம், உயரம் மற்றும் அறிவுக்கு எட்டாதது (எபே.3:18-19). அவரது அன்பிலிருந்து நம்மை எதுவும் பிரிக்க முடியாது (ரோமர் 8:35). உத்தமமும் உண்மையு முள்ளவர் (வெளி.19:11).

அவர் நாமம் இயேசு, ஏனெனில் தமது ஜனத்தை பாவத்திலிருந்து இரட்சிப்பவர் (மத்.1:21). அவர் நாமம் எல்லாவற்றிற்கும் மேலானது (பிலி.2:9). வேறு எந்த நாமத்தாலும் இரட்சிப்பு இல்லை (அப்.4:12). உலகத்தை மீட்டு இரட்சிப்பவர் (யோவா.4:42). முற்று முடிய இரட்சிக்கிறவர் (எபி.7:25).

தேவ ஆட்டுக்குட்டி (யோ.1:29). அவருடைய இரத்தம் விலையேறப் பெற்றது (1பேது.1:19). மீட்புக்கும் மன்னிப்புக்கும் காரணர்(கொலோ.1:14). ஆடுகளுக்காக ஜீவனைக் கொடுக்கிற தேவ ஆட்டுக்குட்டி (யோவா.10:14-15). ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண் காணியுமானவர் (1பேது.2:25). தேவனுக்கும் மனிதனுக்குமிடையில் மத்தியஸ்தர் (1தீமோ.2:5). பிதாவினிடத்தில் நமக் காகப் பரிந்து பேசுகிறவர் (1 யோ.2:1).

தாவீதின் குமாரன் (மத்.15:22). மனுஷ குமாரன் (மத்.16:27). இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராய் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவர் (எபி.2:17-18). தம்மைத் தான் தாழ்த்தி மனுஷ சாயலானவர் (பிலி.2:7-8). நமது பெலவீனங்களுக்காக பரிதாபப்படுகிறவர் (எபி.4:15) நம் முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு நமது நோய்களை சுமந்தவர் (மத்.8:17). குணமாக்குகிறவர் (மத்.4:23). விடுதலை பண்ணுகிறவர் (யோ. 8:36). விடுவிக்கிறவர் (கலா.1:4). இன்னுமாக மகிமையான காரியங்களைச் செய்கி றவர் (மத்.13:54). நமக்காகப் பரிந்து பேச ஜீவித்திருக்கிறவர் (எபி.7:25).

உலகத்தை ஜெயித்தவர் (யோ.16:33). நமது வெற்றிக்கு ஆதார மானவர் (ரோமர் 8:37). விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரும் (எபி.12:2). முடிவு பரியந்தமும் ஸ்திரப்படுத்து கிறவர் (1கொரி.1:8). அவர் சிலுவை யிலறையப்பட்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு தேவனால் உயிரோடெ ழுந்தவர் (1கொரி.15:3-4). அவர் உயிர்த் தெழுதலும் ஜீவனுமானவர்(யோ.11:25) மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவர் (வெளி.1:5). மரணத்திற்கும் பாதாளத் திற்குமுரிய திறவுகோல்களை உடை யவர் (வெளி. 1:18). நிரப்பத்தக்கதாக எல்லா வானங்களுக்கும் மேலாக ஏறினவர் (எபேசி.4:10).

நமது மணவாளன் (மத்.9:15). அவருடைய மகிமையைப் பார்க்கும் படி அவரோடிருக்க விரும்புகிறவர் (யோவா.17:24). நமது ஆசீர்வாதமான நம்பிக்கை (தீத்து.2:13). அவருக்காக ஆவலோடு காத்திருக்கிறவர்களுக்காக திரும்ப வருகிறவர் (எபி.9:28). தமது பிதாவின் மகிமையோடும் தூதர்க ளோடும் திரும்ப வருவார் (மத்.16:27).

அவர் ராஜாதிராஜா, கர்த்தாதி கர்த்தா (வெளி.19:16). பூமியின் ராஜாக் களை ஆளுகிறவர் (வெளி.1:15). நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சாயலுக்கு ஒப்பாக மாற்றுகிறவர் (பிலி.3:21). இயற்கைக்கு மேல் அதிகாரமுடையவர் (மத்.2:27). பாவங்களை மன்னிக்க அதிகாரமுடையவர் (மத்.9:2). வானத்தி லும் பூமியிலும் சகல அதிகாரமும் உடையவர் (மத்.28:18). எல்லாம் அவரு டைய கரங்களிலிருக்கிறது(யோ.3:35). ஒவ்வொரு புருஷனுக்கும் தலை(1கொரி.11:3). சபைக்குத் தலைவர் (எபேசி.5:23). எல்லாத் துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் தலையானவர் (கொலோ.2:10). துரைத்தனங்களையும் அதிகாரங்களையும்உரிந்து கொண்டவர் (2:15).பிசாசின்கிரியைகளைஅழித்தவர் (1 யோவா.3:8). மரணத்தை அழித்து ஜீவனையும் அழியாமையையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தவர் (2தீமோ.1:10). மரித்தோருக்கும் உயிருள் ளோருக்கும் தேவன் (ரோமர் 14:9). தேவனுடைய வல்லமையும் ஞானமும் (1கொரி.1:24). எல்லாவற்றிற்கும் முதன் மையானவர் (கொலோ.1:18).

அவரை முற்றிலும் நம்புங்கள்

எத்தனை நல்ல இரட்சகர்! அவரது மகிமை, வல்லமை, அன்பு மற்றும் ஆதாரங்களுக்கு அளவே இல்லை. அவர் எல்லாவற்றிற்கும் போதுமானவர். நமக்குத் தேவையான அனைத்தும் அவரிடமுண்டு. அவரது நிறைவு நமது வாழ்வின் நிறைவுக்குப் போதுமானது.

எனவே நமது தேவைகளுக்காக அவரை நம்பி அவரை நோக்கிப் பார்ப்போம். அவரது வாழ்வு, அன்பு, வல்லமை, தூய்மை போன்ற எல்லா வற்றையும் அவரிடமிருந்து பெற்றுக் கொள்வோம். கிறிஸ்துவில் வாழ்வைத் தொடங்கியது போல முடிப்போம்- அதற்காக கிறிஸ்துவை நம்புவோம்.

ஜெபிப்பதற்கும் அவரது பணி செய்வதற்குமான வல்லமை

Power for praying and working

Andrew Murray (1828-1917)

"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிற படியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளை தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப் படும்படியாக அதைச் செய்வேன்" (யோ.14:12-13).

நமது இரட்சகராகிய ஆண்டவர் தமது பொதுப்பணிதனை சீஷர்களோடு ஆரம்பித்த போது மலைப் பிரசங்கத்தின் மூலம் ஆரம்பித்ததையும், அவர் கடைசியில் கொடுத்த விடைபெறும் செய்தியையும் யோவான் அழகாக நமக்கு எழுதி வைத்திருக்கிறார். இரண்டிலும் அவர் ஜெபத்தைக் குறித்து ஒன்றிற்கு மேற்பட்டு குறிப்பிட்டாலும் அதில் வேறுபாடு இருக்கிறது. மலைப் பிரசங்கத்தில் சீஷர்கள் இப்போது தான் அவரிடம் கற்றுக் கொள்ள வந்தவர் களானபடியால், தேவன் அவர்களது பிதா என்று சரியான அறிவில்லாதபடி யால் அவர்களது ஜெபம் தனிப்பட்ட தேவைகளுக்காக மட்டுமாயிருந்தது. அவரது இறுதி செய்தியில் அவரது வாழ்வு இவ்வுலகில் இறுதியை எட்டுவ தாயும் சீஷரை தமது இடத்தில் செய்தி யாளர்களாக அனுப்புவதுமாயிருந்தது.

முதலுள்ளதில் கற்றுக்கொடுக் கப்பட்ட முக்கிய பாடம் குழந்தை களைப் போலாக வேண்டும். விசுவாசத் தோடு ஜெபிக்க வேண்டும். நல்ல ஈவுகளைப் பெற பிதாவிடம் ஜெபிக்க வேண்டும். இங்கு அவர் மேலான வைகளை குறிப்பிடுகிறார். சீடர்கள் இப்போது நண்பர்களாகி விட்டார்கள். அவர்களுக்கு அவர் பிதாவைக் குறித்து நன்கு அறிவித்து விட்டார். அவர்கள் தமது திட்டத்திற்குள் வந்து விட்டனர். இனி அவர்கள் கைகளில்தான் தமது பணி, இவ்வுலகத்தில் அவரது இராஜ்யம் ஆகியவை ஒப்படைக்கப்பட வேண்டும்.

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது அவர்கள் வெளியே சென்று அவரது பணியைச் செய்ய வேண்டும். வரப்போகிற அவருடைய உயர்த்தப்படும் வல்லமையால் இன்னும் பெரிய காரியங்களைச் செய்ய வேண்டும். தாங்கள் செய்யப்போகிற பணிக்கு வல்லமை பெற ஜெபம் தான் ஊடகமாயிருக்க வேண்டும். கிறிஸ்து பரத்துக்கேறிய போது அவர்கள் ஜெபிப் பதற்கும் ஊழியம் செய்வதற்குமான புதிய யுகம் ஆரம்பமாயிற்று.

நமது வேதபகுதியில் இந்தத் தொடர்பு மிகத் தெளிவாக வெளிப் படுகிறது. இவ்வுலகில் இப்போது அவர்கள் அவருடைய சரீரம். பரத்தில் அவரோடு ஒன்றாயிருப்பது போல அவர் செய்ததை விட பெரிய பணியை இங்கு செய்ய வேண்டியவர்கள். அவர் களுடைய முன்னேற்றங்களும் வெற்றி களும் அவர் பெற்றதை விடக்கூடுதலாக இருக்க வேண்டும். இதற்காக அவர் இரு காரணங்களைக் கூறுகிறார். ஒன்று அவர் பிதாவினிடத்தில் எல்லா அதிகாரங் களையும் பெற்றுக்கொள்ளச் செல்கி றார் என்பது. இன்னொன்று அவர்கள் தமது நாமத்தில் கேட்டு அவற்றைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பது.

நான் எனது பிதாவினிடத்தில் செல்லுகிறபடியால், அதோடு நீங்கள், எதைக் கேட்டாலும் அதைச் செய் வேன் என்ற இரு பகுதிகளைக் காண் கிறோம். எனவே அவர் பிதாவினி டத்தில் செல்வது இரண்டு ஆசீர்வாதங் களைத் தருகிறது. அவர்கள் அவருடைய நாமத்தில் கேட்டுப் பெற்றுக்கொள் வார்கள். அதன் விளைவாக அவர்களால் பெரிய காரியங்களைச் செய்யக்கூடும். இங்கு இரு முக்கிய பாடங்களைக் கற்றுக்கொள்கிறோம். இயேசு செய்தது போன்ற பெரிய காரியங்களைச் செய்ய அவருடைய நாமத்தில் ஜெபிக்க வேண்டும். அவருடைய நாமத்தில் ஜெபிக்கிற ஒருவர் அவருடைய நாமத்தில் பணி செய்ய வேண்டும்.

பெரிய காரியங்களைச் செய்ய வல்லமைக்காக ஜெபிக்க வேண்டும்.

வேலை செய்கிறவர்கள் ஜெபிக் கவும் வேண்டும். ஜெபத்தில்தான் வேலை செய்வதற்கான வல்லமை கிடைக்கிறது. விசுவாசத்தில் பணி செய்கிறவன் இயேசு செய்தவற்றைச் செய்ய முடியும். அதற்காக அவன் ஜெபிக்கிறவனாயிருக்க வேண்டும். இயேசு இவ்வுலகில் இருக்குமட்டும் அவர் தாமே பெரிய காரியங்களைச் செய்தார். சீஷரால் துரத்திவிடப்படாத பிசாசுகள் அவரது வார்த்தையால் ஓடின. அவர் பிதாவிடம் சென்ற பிறகு சரீரத்தின்படி அவர் இவ்வுலகத்தி லில்லை இப்போது அவருடைய சீஷர்கள்தான் அவருடைய சரீரம். பரலோக சிங்காசனத்திலிருந்து பூமியில் செய்யப்பட வேண்டிய அத்தனை வேலை களும் அவர்களால்தான் செய்யப்பட வேண்டும், அது செய்யப்படவும் கூடும்.

அவர் பரத்துக்குச் சென்றபடி யால் அது பிரதிநிதிகளால் நடத்தப் படுவதால் வேலை குறைவாகவும் பலவீனமாகவுமே நடக்கும் என்று சிலர் நினைக்கலாம். ஆனால் அவர் இதற்கு மாறாக சொல்வது என்னவென்றால் "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடி யினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளை தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்".

அவருடைய நெருங்கி வரும் மரணம் பாவத்தின் வல்லமைக்கு முற்றுப்புள்ளி வைப்பதாயிருந்தது. உயிர்த்தெழுதலோடு நித்திய ஜீவனுக் குரிய வல்லமை மனித சரீரத்தை சொந்தமாக்கி மனித வாழ்வுக்கு மேலாக சிறப்புப் பெற்றது. அவரது பரமேறு தலால் தமது தூய ஆவியை தமக்குரிய வர்களுக்கு அளிக்க முடிந்தது. சிங்கா சனத்தில் வீற்றிருக்கும் அவருக்கும் பூமியிலிருக்கும் நமக்கும் இடை யிலுள்ள ஐக்கியம் மிகவும் நெருக்க மானதாகவும், தெய்வீகமானதாகவும், பரிபூரணமானதாகவும் இருப்பதால் தான், "நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவா சிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளை தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" என்று கூற முடிந்தது.

இது உண்மையாகவே நடந் தேறியது. இயேசு இவ்வுலகில் 3 ஆண்டுகளாக தமது தனிப்பட்ட பணி யால் சுமார் 500 சீஷர்களை சம்பாதித் திருக்கலாம். அவர்களும் பெலவீன பாண்டங்களாகவே இருந்தனர். ஆனால் பேதுரு, பவுல் போன்றவர்கள் பெரிய காரியங்களைச் சாதித்தனர். பரலோக சிங்காசனத்தில் இருந்து கொண்டே அவர் அவர்கள் மூலமாக பெரிய காரியங்களைச் செய்தார்.

ஆனால் ஒரு நிபந்தனையிருக் கிறது. அவர் பிதாவினிடத்திற்கு போகிற படியால் அவர் ஒரு புதிய வல்லமையை ஜெபத்தைக் கேட்பதற்குக் கொடுக் கிறார். எனவே பெரிய காரியங்களைச் செய்ய இரண்டு காரியங்கள் தேவை. அவர் பிதாவிடம் சென்று வல்லமை பெற வேண்டும். மற்றும் நமது ஜெபம் அவர் நாமத்தில் ஏறெடுக்கப்பட்டு அவரிடத்திலிருந்து வல்லமையைப் பெற வேண்டும்.

அவர் பிதாவிடம் கேட்கும் போது பெரிய காரியங்களை நாம் செய்ய பிதாவிடமிருந்து வல்லமை பெற்று நமக்களிக்கிறார். நாம் விசுவா சித்து அவரிடம் அவர் நாமத்தில் கேட்கும் போது வல்லமை வந்து நம்மை ஆட்கொண்டு பெரிய காரியங்களை நாம் செய்யச் செய்கிறது.

நாம் செய்யும் எவ்வளவோ பணிகளில் தேவ வல்லமை காணப்பட வில்லை. காரணம் ஒன்றே ஒன்றுதான். அவரில் விசுவாசம் வையுங்கள், அவர் நாமத்தில் ஜெபியுங்கள். இது தான் குறைவு.

உழைக்கிறவர்களே, சபையி லுள்ள தலைவர்களே, பள்ளிகளில் செயல்படுகிறவர்களே, மக்கள் நலனுக் காகப் பாடுபடுகிறவர்களே, அயல் நாட்டுமிஷன்களில் சேவை செய்கிறவர் களே இதைக் கற்றுக்கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில் பண்ணும் ஜெபமே இயேசு தேவனிடத்திலிருந்து பெற்ற வல்லமையின் பாதை. இந்த வல்லமையால்தான் விசுவாசிக்கிறவர்கள் பெரிய காரியங்களைச் செய்வார்கள்.

எந்தப் பராது, பெலவீனம், தகுதியின்மை, கஷ்டங்கள், தோல்விகள் எல்லாவற்றிற்கும் இயேசு கொடுக்கும் ஒரே பதில்: "நான் என் பிதாவினிடத் திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளை தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" என்பதே. நாம் மனதிலாக்கவேண்டிய முதலும் முக்கியமுமான காரியம் என்னவென் றால் இயேசுவின் பணியைச் செய்கிற வர்கள் விசுவாசித்து சர்வவல்லவரோடு தொடர்பு கொள்ள வேண்டும், பின்பு அவரது நாமத்தில் விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும். இவையில் லாவிடில் நமது ஜெபம் மனுஷீகமும் மாம்சீகமுமானது. நமது பாவங்களைக் கட்டுப்படுத்தவோ, ஆசீர்வாதங்களுக் கான பாதையைத் திறக்கவோ அந்த ஜெபம் பயன்படலாம். ஆனால் உண்மையான வல்லமை குறைவுபடு கிறது. பயனுள்ள வேலைக்கு ஊக்க மான ஜெபம் தேவை.

அவரது பணியில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்

இப்போது இரண்டாவது பாடம். ஜெபிக்கிறவர்கள் பணி செய்ய வேண்டும். ஜெபத்திற்கு மிகப்பெரிய வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டி ருப்பது பணி செய்ய வல்லமைப் பெற்றுக்கொள்வதற்காகும். பணி செய் யும் போதுதான் விசுவாசத்தோடு செய்யும் ஊக்கமான வேண்டுதல் பெற்றுக்கொள்ளப்படுகிறது. நமது அருமை இரட்சகரது பிரிவு வேளையின் வாக்கியங்களில் ஆறு முறைகளுக்கு குறையாமல் (யோவ.14:13-14; 15:7; 16, 16:23-24) ஜெப வாக்குத்தத்தங்கள் மீண்டும் மீண்டுமாக வருகின்றன. எடுத்து காட்டு: '**எதைக் கேட்டாலும்**'.

எத்தனை விசுவாசிகள் இதை சந்தோஷத்தோடும், நம்பிக்கை யோடும், ஆழமான உத்தமத்தோடும் ஜெபிக்க விரும்புகிறீர்கள்? அவர் ஏமாற்றமடைந்து விட்டாரா? காரணம் அவர் அந்த வாக்குத்தத்தத்தை சூழ் நிலையிலிருந்து பிரித்துவிட்டதே.

ஆண்டவர் தமது நாமத்தை பிதாவோடு இணைந்து சுயாதீனமாக பயன்படுத்தி அவருடைய செயல்க

(8-ம் பக்கம் பார்க்க)

தாங்கள் செய்யப்போகிற பணிக்கு வல்லமை பெற ஜெபம் தான் ஊடகமா யிருக்க வேண்டும்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ளைச் செய்ய உதவுகிறார். எந்த சீஷன் தன்னை முற்றிலுமாக இயேசுவுக்கு அர்ப்பணித்து அவரது அரசுக்காகவும், அவருடைய சித்தம் மகிமைக்காகவும் செயல்படுகிறார்களோ, அவர்களுக்கு வல்லமையளிக்கப்பட்டு வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படும். இந்த வாக்குத்தத்தத்தை பற்றிக் கொள்ளாமல் வேறு எதையோ விசேஷமாகப் பெற்றுக் கொள்ள ஒருவன் விரும்பினால் அவன் ஏமாற்றமடைவான். ஏனெனில் அவன் இயேசுவைத் தனது சொகுசுக்காக வேலைக்காரனாக மாற்றுகிறான்.

ஆனால் விசுவாசத்தோடு ஊக்கமாக ஜெபிக்க விரும்புகிறவன், அவன் தனது எஜமானுடைய வேலையின் தேவைக்காகக் கேட்பதால் அது அவனுக்கு அருளப்படும். அவன் தனது ஆண்டவருக்கு தன்னைப் பணியாளாக அவன் கருதுகிறான். ஜெபம், பணி செய்ய போதிக்கவும் பலப்படுத்தவும் செய்கிறது. பணியானது ஜெபிக்கப் போதிக்கவும் பலப்படுத்தவும் செய்கிறது.

இது இயற்கை வாழ்விலும் ஆவிக்குரிய வாழ்விலும் ஒத்துப்போகிறது. உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், அல்லது கொஞ்சத்தில் உத்தமமாயிருப்பவன் அனேகத்திலும் உத்தமமாயிருப்பான். நாம் நமது எஜமானுடைய பணியில் கொடுக்கப்பட்ட சிறிதளவு கிருபையைக் கொண்டு நமது எஜமானுடைய பணிக்கு நம்மை அர்ப்பணிப்போம். அர்ப்பணிப்பு உண்மையான ஜெப பாட சாலையாக மாறி விடும்.

மோசே கடின கழுத்துள்ள மக்களை வழி நடத்திய போது அவனுக்கும் தேவை ஏற்பட்டது. அவன் தைரியமாகத் துணிச்சலுடன் தேவனிடம் பெரிய காரியங்களைக் கேட்டான் (யாத்.33:12,15,18) நீங்கள் உங்களை முற்றிலும் தேவபணிக்கு ஒப்புவித்தால் இதைவிட பெரிதான வாக்குத்தத்தங்களை அடையலாம்.

தேவனே உமது வாக்குத்தத்தங்களை நான் கேட்டேன். அவை என் புத்திக்கு எட்டாதவை. ஆனாலும் நான் வேறெதுவும் செய்ய முடியாது. ஒரு சிறு பிள்ளையின் விசுவாசத்தோடு அவற்றை எடுத்துக் கொண்டு எனது வெகுமதியாக வைத்துக் கொள்கிறேன். நீர் பிதாவினிடத்தில் சென்றிருக்கிற படியால் உம்மை விசுவாசிக்கிறவர்கள் நீர் செய்ததை விடப் பெரிதான காரியங்களையும் செய்வதாகச் சொல்லியிருக்கிறீர். கர்த்தாவே நான் உம்மை ஆராதிக்கிறேன். நீர் மகிமைப்படுத்தப் பட்டவர், உமது வாக்குத்தத்தங்கள் நிறைவேறக் காத்துக்கொண்டிருக்கிறீர். எனது முழு வாழ்வும் உம்மை விசுவாசிப் பதிலே தொடரட்டும். எனது இருதயத்தை கழுகி சுத்திகரியும். உமக்கும் உமது அன்புக்கும் நான் பாத்திரமாய் வாழட்டும். உம்மை விசுவாசிப்பதே என் வாழ்வின் மூச்சாக இருக்கட்டும்.

நீர் பிதாவினிடத்தில் செல்வதால் உம்முடைய நாமத்தில் எதைக் கேட்டாலும் தருவதாகக் கூறியிருக்கிறீர். உமது வல்லமையுள்ள சிங்காசனத்திலிருந்து உமது ஜனங்கள் உமக்குக் கொடுக்கப்பட்ட வல்லமையை பகிர்ந்து கொள்வார்களாக. உமது சரீரத்தின் அவயவங்களாக விசுவாச ஜெபத்தின் மூலம் உமது நாமத்தினாலே எல்லாவற்றையும் பெற்றுக் கொள்வார்களாக. ஜெபத்தின் வல்லமை உம்மிடத்தில் இருக்கிறது. வேலையில் வல்லமை மனிதனிடமிருக்கிறது. நீர் இவ்வாறு எல்லா ஜனங்களுக்கும் எனக்கும் வாக்குப் பண்ணியிருக்கிறீர்.

ஆசீர்வதிக்கப்பட்ட ஆண்டவரே, நாங்கள் உம்மை மிகக் குறைவாக விசுவாசித்ததையும், உமது வாக்குத்தத்தங்களை எடுத்துக் கொள்ளாததையும், உமது உத்தமத்தை நிரூபிக்கத் தவறியதையும் எங்களுக்கு மன்னிப்பீராக. வானத்திலும் பூமியிலும்மேலான உமது நாமத்தைச் சரியாக நாங்கள் கனம் பண்ணாத எங்கள் தவறை எங்களுக்கு மன்னியும்.

உமது நாமம் எல்லா மனிதர், பிசாசுகள் எல்லாவற்றிற்கும் மேலானது என்பதை நிரூபிக்கும்படி நான் ஜெபிக்க எனக்கு கற்றுத்தாரும். நான் பணி செய்யவும், ஜெபிக்கவும் அதன் மூலம் நீர் சர்வ வல்லவர் என்று உம்மை மகிமைப் படுத்தி, உமது பெரிய பணியை என் மூலம் நிறைவேற்றவும் உதவி செய்யும்.

சாட்சியாயிருப்பதற்கு ஆவிக்குரிய நிறைவு

Spiritual fullness for witnessing

Lois J. Stucky (1925-2014)

"ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்." மத்.24:14

நாம் கிறிஸ்துவின் வருகைக்காக ஆவலோடிருப்போமானால் பரிசுத்தவான் '**ஆயத்தமாயிருப்பதையும்**' சுவிசேஷம் '**எல்லா தேசங்களிலும்**' சாட்சியாக அறிவிக்கப்படுவதையும் காண வாஞ்சையாயிருப்போம். இது நாம் முற்றிலும் விழிப்புடனும் எச்சரிப்புடனும் விழித்திருந்து தேவ சித்தத்தை அறியவும், செய்யவும் வேண்டிய நேரம். ஜெபம் ஆரம்பப் புள்ளியாக இருக்க வேண்டியது அவசியம்.

முக்கியமாக ஒருவருக்கொருவர் தூய ஆவியானவரின் நிறைவைப் பெற்றுக் கொள்ளவும், அவரில் தொடர்ந்து நடக்கவும் முயற்சி செய்யவும் ஜெபிப்போம். இந்த நடைப்பயணத்தை தேவன் நமக்கு அன்பாக ஆயத்தம் பண்ணியிருக்கிறார். அதற்காக அவரோடு நாம் நமது தேவைகளைப் பகிர்ந்து கொண்டு அவர் பணியினை அவர் காட்டுமிடமெல்லாம் செய்து நிறைவேற்ற வேண்டும். உலகம், மாம்சம், பிசாசு இவை நம்மை தாலாட்டி தூங்க விடாதபடி அவரது நிறைவை நாடித் தேடுவோம்.

அவசர ஜெப வேண்டுகோள்

வட இந்தியாவில் ஊழியம் செய்கிற மிஷனெறிகள், சமீபத்தில் மிகவும் கடினமான சூழ்நிலைகளை சந்திக்கிறார்கள். அநேக மாநிலங்களில் மதமாற்ற தடை சட்டம் இருந்தாலும், உத்திர பிரதேசத்தில் அந்த சட்டத்தை மிகவும் கடினமாக்கி, ஆயுள் தண்டனை, 20 ஆண்டுகள் என்று சட்டம் இயற்றி இருக்கிறார்கள். வேறு சில சம்பவங்களும் ஊழியர்களுக்கு நேரிடுவதை ஊடகங்கள் வழியாக நாம் அறிகிறோம். வருகையின் தூதன் வாசகர்கள் இதற்காக ஊக்கமாக ஜெபிக்கும்படி அதிக அன்பாய் கேட்கிறேன்.

"அப்படியே பேதுரு சிறைச் சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள்" அப்.12:5.

சிந்தனைக்கு

சூரியன் தெற்கே சென்று மறைந்து, பின்பு வடக்கே திரும்பும் நாளாகிய டிஸெம்பர் 25-ம் தேதியை பாபிலோன் மதத்தவர் சூரிய தேவனின் பிறந்த நாளாய்க் கொண்டாடி வந்தனர். அந்நாளே **கிறிஸ்து பிறப்பு பண்டிகைத்** தினமாய் மாற்றப்பட்டது.

ஈஸ்டர் என்பது இஸ்டார் என்னும் அஸ்தரோத் தேவியின் பெயரின் மறுபேரேயன்றி வேறல்ல.

நாம் துணிச்சலான **விசுவாசத்தோடு** கிறிஸ்துவோடு அடியெடுத்து வைத்தால் அவர் நமக்காக ஏராளமான **நன்மைகளைச்** செய்ய வல்லவராயிருக்கிறார்.

வேலை செய்கிறவர்கள் ஜெபிக்கவும் வேண்டும். **ஜெபத்தில்**தான் வேலை செய்வதற்கான **வல்லமை** கிடைக்கிறது.

கிறிஸ்தவ வாழ்வின் **ஆதாரங்கள்** இயேசுகிறிஸ்துவே. அதுவே எல்லாம். அதுவே போதுமானது.

இயேசுகிறிஸ்து நமது உதவியாளராக மட்டும் இருக்க விரும்பவில்லை. அவர் நமது **ஜீவனாகவே** இருக்க விரும்புகிறார்.

Contact:
VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason